

மதுரை மாவட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், மறு கட்டுமானத் திட்டத்தின் கீழ் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரத்தில் ரூபாய் 62.68 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 396 வீடுகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக பொது மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பயனாளிகளுக்கு வீட்டிற்கான ஆணை மற்றும் சாவியை வழங்கி பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



மதுரை விளாங்குடி கிராமம் தீக்கதிர் அருகே அமைந்துள்ள சிங்கம்பிடாரி சேவுகப் பெருமாள் அய்யனார் திருக்கோவில் கும்பாபிஷே விழா நடைபெற்றதைத் தொடர்ந்து நடைபெற்ற மாபெரும் அன்னதானத்தை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல் ஏ., துவக்கி வைத்தார். உடன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் குடைவீடு அருண்குமார் உள்ளிட்ட திருப்பணிக்குழுவினர் உள்ளனர்.

## த.வெ.க.வுக்கு ஆதரவளித்து வந்த

# ஜனநாயக முஸ்லிம் மக்கள் கட்சி - தி.மு.க. கூட்டணிக்கு முழு ஆதரவு!

### நிறுவனர் - தலைவர் டாக்டர் எம்.எப்.தமீம் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை நேரில் சந்தித்து ஆதரவுக் கடிதம் அளித்தார்!



*சென்னை, மார்ச் 12-*

*ஜனநாயக முஸ்லீம் மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் டாக்டர் எம்.எப்.தமீம் மற்றும் மாநில நிர்வாகிகள் நேற்று முன்தினம் (10.03.2026) காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக அமர்ந்தால் தான், தமிழ்நாட்டில் "எல்லோருக்கும் எல்லாம்" கிடைக்கும் என்றும், திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட, தனது கட்சி இதுவரை த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்து வந்ததை வாபஸ் பெற்றுக் கொண்டு, இன்று முதல் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு அளித்து, தி.மு.க. கூட்டணி வெற்றிக்கு உறுதுணையாகச் செயல்படுவோம் என்று கூறினர்.*

*கழகக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து அக்கட்சியின் தலைவர் டாக்டர் எம்.எப். தமீம், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பியுள்ள ஆதரவுக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-*

*இஸ்லாமிய சிறுபான்மை மக்களின் ஒப்பற்ற பாதுகாவலராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் தளபதி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமையும் தமிழக மக்கள் நலனுக்காகவும் தமிழ்நாடு முன்னேற்றத்திற்காகவும் இரவு பகல் பாராமல் ஓய்வின்றி உழைக்கும் ஆற்றலைக் கண்டு நடைபெறவிருக்கும் 2026 சட்டமன்ற பொது தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஜனநாயக முஸ்லிம் மக்கள் கட்சி நிபந்தனை யற்றமுழு ஆதரவு அளித்து மேலும் தமிழ்நாடு முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இஸ்லாமிய சிறுபான்மை மக்கள் மத்தியில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் அனைவரையும் மாபெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய ஓய்வின்றி உறுதுணையாக செயல்படுவோம் என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இவ்வாறு அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நன்னிலம் நடராசன்

## மார்ச் 12 (2002)



**நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக்காக்க செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள் நன்னிலம் வட்டத்தில் கழகம் ஆல்போல் வளர்த்தவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக பணியாற்றியவர்.**

**தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல போராட்டங்களில் பங்கேற்றவர். நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**இளமைப்பருவம் முதல் இறுதிநாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவை பேச்சால் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சென்னை மாநகராட்சி மகளிர் தின விழா:

சென்னை, மார்ச். 12–

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் உலக மகளிர் தின விழா மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (10.03.2025) நடைபெற்றது.

இவ்விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் பங்கேற்று, பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய 25 மகளிர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மகளிர் சாதனையாளர் விருதுகளை வழங்கிப் பாராட்டினார். மேலும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு, மகளிர் அலுவலர்களுக்கிடையே நடைபெற்ற கவிதைப் போட்டி, சைகை நடிப்பு (Dump Charades), பாட்டுப் போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மேயர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழகத்தில் பெண்களின் முன்னேற்றம் இன்று மிகச் சிறப்பாக உள்ளது. இங்கு வந்துள்ள மகளிர் அனைவருமே மாநகராட்சியில் பணியில் சேர்ந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள். ஆனால் இதுவே ஒரு 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பாக பாட்டி காலத்தில் பள்ளிக்கு செல்வதே கடினமான ஒன்றாக இருந்தது. 10ஆம் வகுப்பு முடித்தாலே ஒரு பெரிய படிப்பு முடித்தது போல் சொல்வார்கள். அம்மா காலத்தில் கல்லூரி செல்வதே கடினமாக இருக்கும். ஆனால் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிருக்கும் கல்வி வழங்க வேண்டும். ஒரு தனி நபரிடம் பறிக்க முடியாத சொத்து கல்வி தான் என்று சொல்லி, முக்கியமாக பெண்களுக்கு கல்வி தான் முக்கியம் என்று பெண்களுக்கான முன்னேற்றத்தை நம்முடைய தமிழ்நாட்டில் ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் வரும் சட்டமன்றத் தேர்தல்களிலும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**10.03.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

**1. ஒன்றிய அரசு வர்த்தக பற்றாக் குறையை தீர்க்க எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?**

**டி.ஆர்.பாலு**



2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு நிதியாண்டில் வர்த்தக பற்றாக்குறை 25 சதவீதம் அதாவது 25 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது குறித்து திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். வர்த்தக பற்றாக்குறை இவ்வளவு அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் என்ன? இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன? மற்றும் அரசாங்கம் இந்த மோசமான போக்கை எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகிறது? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**2. நீட் கட்-ஆஃப் குளறுபடிகள் ஏன்? எய்ம்ஸ் மருத்துவமனை பயன்பாட்டிற்கு வருவது எப்போது?**

**பி.வில்சன்**



அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு மாநில அரசு வழங்கிய இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட மொத்த OBC மருத்துவ இடங்களின் எண்ணிக்கை குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு பிரிவிலும் NEET PG தகுதி கட்–ஆஃப்களின் விவரங்கள் மற்றும் சரிவுக்கான காரணங்கள் என்ன? 2014 முதல் அறிவிக்கப்பட்ட AIIMS இன் விவரங்கள், பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் என்ன? அவற்றின் தாமதத்திற்கான காரணங்கள் என்ன? எனும் முக்கியமான கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

**3. உர இறக்குமதியில் சீனாவை சார்ந்திருப்பது ஏன்? உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தாது ஏன்?**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**



உர இறக்குமதியில் இந்தியா சீனாவை சார்ந்திருப்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே. ஆர்.என் ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் TMAP மற்றும் யூரியா-கரைசல் தயாரிப்புகள் இறக்குமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு? அக்டோபர் 2025 இல் சீனா ஏற்றுமதியை நிறுத்தியதைத் தொடர்ந்து உர விலைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான உயர்வை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள்? என்றும் கேட்டுள்ளார்.

**3. இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!**

**ஆர்.கிரிராஜன்**



இந்திய உணவுக் கழகம் (FCI) மற்றும் மத்திய கிடங்கு கழகம் (CWC) ஆகியவற்றின் செயல்பாட்டு திறன்களை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் உணவு தானியங்களின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தில் அதன் நிதி மேலாண்மையை மேம்படுத்துவதற்காக சாந்தா குமார் குழு பரிந்துரைத்த சீர்திருத்தங்களை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளதா? எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**4. ஒன்றிய அரசின் பாரத் டாக்ஸி பயன்பாட்டுக்கு வருவது எப்போது?**

**டி.எம்.செல்வகணபதி**



2002 ஆம் ஆண்டு பல மாநில கூட்டுறவு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட இந்தியாவின் முதல் கூட்டுறவு வாடகை கார் சேவையான பாரத் டாக்ஸி குறித்து திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சேவை நாட்டின் மற்ற பகுதிகளில் எப்போது அறிமுகப்படுத்தப்படும்? முக்கிய பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுடன் போடப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் யாவை? இந்த தளம் தொடங்கப்பட்டதன் மூலம் உருவாக்கப்படக்கூடிய வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியுள்ளதா? தனியார் டாக்ஸி ஒருங்கிணைப்பாளர்களுடன் ஒப்பிடும்போது இந்த தளத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? மேற்கூறிய திட்டத்தின்கீழ் பெண் ஓட்டுநர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. தமிழ்நாட்டில் சமர்த் திட்டத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!**

**சி.என். அண்ணாதுரை - க.செல்வம்**





தமிழ்நாட்டில் கைத்தறி, பட்டு மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ள திருவண்ணாமலை மாவட்டங்களில் சமர்த் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டுத் திட்டம்) செயல்படுத்த அரசாங்கம் செய்துள்ள மதிப்பாய்வுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர். கடந்த மூன்று நிதியாண்டுகளில் சமர்த்தின் கீழ் சேர்ந்த, பயிற்சி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் பற்றிய விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் சமர்த் பயிற்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் என்ன? இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு சந்தைப்படுத்தவும் நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# மதுரை பொறுப்புக் குழு உறுப்பினர் வி.எம்.டி.கிள்ளிவளவன் மறைவு!

### அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி – மு.மணிமாறன் – பொன்.முத்துராமலிங்கம் நேரில் அஞ்சலி!



*மதுரை, மார்ச். 12-*

*ஒன்றிய பெருந்தலைவர் வி.எம்.துரைராசு. மகன் வி.எம்.டி. கிள்ளி வளவன் முன்னாள் மதுரை பொறுப்புக் குழு உறுப்பினர், மாநில பொதுக் குழு உறுப்பினர், சமயநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய கவுன்சிலர் என பல்வேறு பதவிகள் வகித்தார்.*

*மேலும் தலைமைக் கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை கைதாகி சிறை சென்றவர்*

*அவர் தந்தை வி.எம். துரைராசு முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு நெருக்கமானவரும் ஆவார்.*

*இவருக்கு ஆனந்த வள்ளி என்ற மனைவியும், கே.வி.ராஜதுரை என்ற மகனும், மங்கையர்க்கரசி வினோத் குமார் என்ற மகளும் உள்ளனர். ராஜதுரை முன்னாள் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக செயலாற்றியவர்.*

*இந்நிலையில் சமய நல்லூர் வி.எம்.டி. கிள்ளி வளவனுக்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 10.03.2026 அன்று இயற்கை எய்தினார். அவருக்கு வயது 67.*

*துயரச் செய்தி அறிந்த மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடபட்டி மு.மணி மாறன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் மதுரை மாவட்ட தி.மு.க.வைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், வணிகர்கள், வியாபாரிகள், விவசாயிகள், பொது மக்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த கழகத்தினர் என பெரும் திரளானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அன்னாரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.*